# கானகன் நாவலில் பளியர் இனமும் இயற்கை பேரழிவும்

***திருமதி. ரா. சித்திரகலா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை ஆய்வுமையம்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் வெ. திலகம்***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958629

## முன்னுரை

இவ்வுலகில் வேறு எந்த இனக்குழுவிற்கும் அல்லது வேறு எந்த மொழி பேசும் மக்கள் திரளுக்கும் இல்லாத தொன்மையும் பாரம்பரியமும் பண்பாட்டின் உச்சமும் தமிழ் சமூகத்திற்கு உண்டு. இத்தகைய தமிழ்ச் சமூகமானது உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கம், நம்பிக்கைகள், சமயம் முதலான பல்வேறு பரிமாணங்களில் தனது பண்பாட்டின் முதிர்வை வெளிப்படுத்தி வருகிறது. ஆதித் தமிழ்ச் சமூகம் இயற்கையுடன் இயைந்தே தனது அனைத்து வித செயல்பாடுகளையும் நகர்த்தியுள்ளது. இயற்கையுடன் இணைந்த வாழ்வியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்ச் சமூகம் இயற்கையை தனது தெய்வமாக்கி அதனை வழிபட்டு வந்துள்ளது. இவ்வாறாக ஐம்புதங்களாகிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றுள் மனிதன் சுவாசிக்கும் காற்று உருவாவதற்கு தேவையான மரங்கள் வெட்டப்படுவதையும், மரங்கள் நிறைந்த காடுகள் அழிக்கப் படுவதையும் காட்டையே வாழிடமாகக் கொண்ட பளியர் இன மக்களும், காட்டில் வாழக்கூடிய வனவிலங்குகள் பாதிப்படைவதையும் கானகன் நாவல் வழி ஆராய்வதாகக் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## இயற்கை

**இயற்கை என்பதற்கு “சுபாவம், இயல்பு, தன்மை”**

***(பெருஞ்சொல் அகராதி தொ.2.ப. 423)***

என தமிழ்ப் பல்கலைக்கழக அகராதி விளக்கம் தருகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்தலே மனிதனை நோயற்றவனாக வாழ வழி செய்கிறது. இயற்கை வாழ்வு வாழ்ந்த அக்காலம் மாறி இன்று மனிதன் செயற்கைக்கு அடிமைப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளாகிறான். அக்கால மக்கள் தம்மைப் போலவே தம் சுழலையும் தூய்மையாக வைத்திருந்தனர் எனலாம். தமிழில் இயற்கை என்ற சொல்லானது,

**"லள வேற்றுமையில் வலிவரின் றடவும்"**

***(நன்னூல் நூற்பா எண். 227)***

என்ற விதிப்படி நிலைமொழியின் ஈற்றிலுள்ள "லகரம்" (இயற்கை - இயல்கை (க் ஐ - கை) வருமொழியின் முதலில் வல்லினம் "க்" வந்ததால்) றகரமாய் திரிந்து இயற்கை என ஆயிற்று. எனவே "இயல்" எனும் சொல் தமிழில் இயங்குகிறது, இயங்குவது, இயக்குவிப்பது என்ற மூன்று காலத்தையும் காட்டும் வினைத்தொகையாக விளங்குகின்றது. இயல்பு என்ற பொருளிலும் அமையும். இது ஒன்றன் செயலைக் கொண்டு அமைந்த தொழிற் பெயராக வருகின்றது. எனவே தான் ஐம்புதங்களின் செயலை விளக்கும் முகமாக இயற்கை எனப்பெயர் பெற்றுள்ளது எனலாம்.

### ஐம்பூதங்களே இயற்கை

மனித சக்தி இல்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். ஐம்புதங்கள் என்று கருதப்படுகின்ற நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு மற்றும் உயிரினங்கள் யாவும் இயற்கையின் கூறுகளாக அமைந்துள்ளன. ஐம்புதங்களை ஆதாரமாகக் கொண்டே உலக உயிர்கள் அனைத்தும் இயங்கி வருகின்றன என்பதை,

***"நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்***
***கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"***

***(தொ.நூற்பா எண். 1589)***

எனத் தொல்காப்பியமும்,

***"மண் திணிந்த நிலனும்***
***நிலனேந்திய விசும்பும்***
***விசும்பு தைவரு வளியும்***
***வளி தலைஇய தீயும்***
***தீ முரணிய நீரும்"***

***(புறநா. பா. எண்.2 பா.அ. 1-5)***

என முரஞ்சியூர் முடி நாகராயர் பாடிய புறநானூற்றுப் பாடலும் கூறுகின்றன. இதனை வள்ளுவப் பெருந்தகையும்,

***"மணிநீரும் மண்ணும் மலையும் மணிநிழற்***
***காடும் உடையது அரண்"***

***(திருக்குறள். 742)***

என்று கூறுகிறார். எல்லா உயிரும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மை உடையவை. நிலம், நீர், காற்று, அதைச் சுற்றியுள்ள மனிதவளம் வாழ்வதற்கு உதவும் உயிர்க்கோளப் பகுதிதான் இயற்கை எனலாம்.

### இலக்கியங்களில் இயற்கை வழிபாடு

இயற்கையின் மீது மனிதன் கொண்டுள்ள அச்ச உணர்வே அவனைத் தெய்வநெறிக்கு இட்டுச் சென்றுள்ளது என்பது மறுக்க இயலாததாகும். "சமயக் கூறுகள் யாவும் மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும், குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாகியிருப்பதாக சிக்மண்டு பிராய்ட் கருதுகின்றார்". மனிதன் தன் அறிவிற்கும் ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின் மீதான அச்சத்தின் விளைவாக அதன் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர இயலாத நிலையில் அதன்மீது கொண்ட அச்சவுணர்வு அன்பாக மாற்றமடைந்து காலப் போக்கில் அதனை வழிபாட்டிற்குரியதாக மாற்றிக் கொண்டான். ஐம்புதங்களை வணங்கிய மனிதன் இயற்கைப் பொருட்களான ஞாயிறு, திங்கள், சந்திரன், நெருப்பு ஆகியவற்றை வழிப்பட்டான்என்பதைப்பாடாண்திணையில்,

***"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற***
***வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்***
***கடவுள் வாழ்த்தொரு கண்ணிய வருமே"***

***(தொல். பொருள் - 85)***

என தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

ஞாயிறை வழிபடும் வழக்கம் உலகமெங்கும் பரவியிருந்த தொன்மையான வழிபாட்டு நிலையாகும். பழந்தமிழர் ஞாயிறை ஆண் தெய்வமாகவே கருதி வழிபட்டு வந்துள்ளனர். இதனை,

***"குணக்கடல் இவர்ந்து குரூஉக்கதிர் பரப்பிப்***
***பகல் கெழு செல்வன் குடமலை மறையப்***
***புலம்பு வந்திறுத்தபுன் கண் மாலை"***

***(நற் - 215. 1 -3)***

என்னும் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் அகநானூற்றிலும் ஞாயிறை ஆண் தெய்வமாக வழிபட்டதை,

**"பகல் செய் பல்கதிர்ப் பகுதியஞ் செல்வன்
அகழ் வாய் வானைத் தாழி போழ்ந்தென
நீரற வறந்த நிரம்பா நீனிடை"**

***(அகம்.229.1 -3)***

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றது.

பழந்தமிழ்ப் பெண்கள் பிறையினை வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதை "தொழுது காண் பிறையிற் தோன்றியது நமக்கு" *(குறுந். 307)* என்னும் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகின்றது. அதேபோல் குறிஞ்சி நில மகளிர் மலையினைத் தொழுதமையினைக் கலித்தொகை குறிப்பிட்டுள்ளது.

**"கொடிச்சியர் கூப்பி வரை தொழு கைமேல்"**

***(கலி, 40:11)***

மேற்காட்டிய சான்றுகள் கொண்டு பழந்தமிழர் இயற்கையின் கூறுகளை நன்மை விளைய வேண்டி வழிபட்டமை புலனாகிறது. திருவள்ளுவரும் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தைப் படைத்து "நீரின்றி அமையாது உலகு" என மழையைப் போற்றுகிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

### பளியர் இனமும் காடும்

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அகமலை வட்டத்தில் மொக்கநிலை பளியக் குடிமக்கள் வாழ்ந்தனர். காட்டை உயிராகவும் காட்டில் வாழும் விலங்குகளைத் தெய்வமாகவும் வழிபட்ட பளியர் இன மக்களின் குலசாமி பளிச்சியை வழிபட்டு வந்தனர். இந்தக் காடு அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, அவர்கள் இந்தக் காட்டை நம்பியிருப்பது போலவே இந்தக் காடும் அவர்களை நம்பித்தான் இருக்கிறது. பளியனும் இந்த வனமும் தனி உலகம். இரண்டில் ஒன்று பிரிந்தால் இன்றொன்று வெகு காலத்திற்கு ஜீவித்திருக்காது *(லட்சுமி சரவணகுமார், கானகன், ப. 64)* என்று கூறுவதிலிருந்து காட்டிற்கும் பளியர் இன மக்களுக்கும் உள்ள உறவை அறிந்து கொள்ள முடிகின்றது.

### காடு அழிக்கப்படுதல்

இயற்கையின் கொடையான காடுகள் அழிக்கப்படுவதை கானகன் நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர் லசுமி சரவணகுமார். மொக்கநிலைக்கு மேல் குரங்காறு போகிற வழியெங்கும் விரவிக் கிடந்த மரங்களும், காட்டுச் செடிகளும் அகற்றப்பட்டு புதிய நடுகைக்கு தயாரானதைப் போல் கருப்பு நிற ஈரமணல் எங்கும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. தை மாதத்தின் பிற்பகுதியை நெருங்கி விட்டதால் பளியக்குடி மொத்தமும் தங்களின் தற்காலிக குடிசைகளை விட்டு மீண்டும் மொக்கநிலை குடிக்கே வந்திருந்தனர். அவர்களின் குடியிலிருந்து நூறடி தூரத்திற்கு அப்பால் புதிதாய் ஒரு மண் சாலை போடப்பட்டிருந்ததும், அந்தச்சாலையில் நேரங்காலந் தெரியாமல் ஆட்கள் போவதும் வருவதுமாயிருக்க, கருப்பு நிறத்தில் முரட்டு ஜிப்புகள் சப்தமெழுப்பியபடியே அந்தக் காட்டை மெல்ல மெல்ல நீண்ட தியானத்திலிருந்து எழுப்பிக் கொண்டிருந்தன.

"பன்னெடுங் காலமாய் தன் வயிற்றில் சுமந்த மரங்களை எல்லாம் இழந்த துயரிலிருந்த அதன் உடலெங்கும் கஞ்சா செடிகளை நட தேனியிலிருந்தெல்லாம் கூட இப்போது முதலாளிகள் வந்து இடம் பார்த்துவிட்டுப் போனார்கள். மேடும் பள்ளமுமாய் கரடு முரடான பாறையாய் இருந்த அந்த மலையை சமதளமென சொல்லிக் கொள்ள முடியாத அளவில் கொஞ்சமாய் சாய்ந்த ஒரு நிலமாய் மாற்றினர். குரங்காற்றிலிருந்து நீர் பெரும் வாய்க்காலைப் போல் திருப்பி விடப்பட்டு நிலம் செம்மையாக்கப் பயன்படுத்தப்பட்டது." *(லஷ்சுமி சரவணகுமார், கானகன், பக். 80,81)* என்று கூறுவதிலிருந்து கஞ்சா காட்டு முதலாளிகள் அன்சாரி, தங்கப்பன் உதவியுடன் காடுகள் அழிக்கப்பட்டு கஞ்சாத் தோட்டம் உருவாக்கப்படுவதையும், இதனால் பளியரின மக்களின்வாழ்வியல்சுழல்பாதிக்கப்படுவதோடு, காட்டில் வாழும் விலங்குகளும் பாதிக்கப்படும் அவல நிலையைக் கானகன் நாவலின் மூலம் அறிய முடிகின்றது.

### மரங்கள் வெட்டப்படுதல்

ஆதித் தமிழ்ச் சமூக மக்கள் இயற்கையுடன் இணைந்தே தங்களது வாழ்வியலை நகர்த்

தியுள்ளனர். உலகின் வேறு எந்த சமூகத்தை விடவும் மிக உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளை தமிழ்ச் சமூகம் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தகைய தமிழ் சமூகத்தின் எச்சமாக வாழும் பழங்குடிகள் காட்டை தங்கள் வாழ்விடமாகவும், காட்டிலுள்ள மரங்களை காட்டு விலங்குகளை தங்கள் குலதெய்வமாகக் கும்பிடும் முறையையும் பல்வேறு இலக்கியங்களில் காண முடிகின்றது. சங்க காலத்தில் மரத்தில் தெய்வம் வந்து தங்கும் என்னும் நம்பிக்கையில் அரசமரம், வேப்ப மரம், ஆலமரம் போன்றவற்றை வழிபட்டனர். இவ்வகையில் கானகன் நாவலில் மொக்க நிலையில் வாழும் பளியனான கட்டையன் கிழங்கு தோண்டி எடுப்பதற்காக நாணற் காட்டைத் தாண்டி போய்க் கொண்டிருந்தான். வெகு அருகாமையில் மரம் அறுக்கும் ரம்பங்களின் சர் சர் சத்தம் அவன் நடந்த வழியெங்கும் கேட்டபடியே இருக்க முன்பு ஒன்றிரண்டு பேர் வந்து மரம் வெட்டி எடுத்துப் போனது போய் இப்பொழுது கூட்டமாக வந்து விட்டார்களே என நினைத்தான்.

இந்த மரங்களை எல்லாம் வெட்டி எடுத்து மலைக்கு அந்தப் பக்கம் மலையாளத்தானிடம் விற்றுத் தீர்ப்பதில் மரம் வெட்டுபவர்கள் வெறித்தனமாய் இருப்பதைப் பார்த்த கட்டையன் பாதையை விட்டு மெதுவாக மரம் வெட்டும் சத்தம் கேட்ட திசை நோக்கி நடந்தான். சத்தம் நெருங்கி வர அச்சத்தில் மரங்களில் கூடுகட்டியிருந்த பறவைகள் பெரும் அலறல் ஒலியெழுப்பிக் கொண்டிருக்க அந்த மரங்களைப் பிரிய முடியாத பெருந்துயரோடு அவை மரங்களையே சுற்றி சுற்றி வருவதும், ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு பறப்பது மாய் இருந்தன.

இருநூறு வருசம் வயதிருக்கும் முற்றிய ஒரு தோதகத்தி மரத்தை நான்கு பேர் அறுத்துக் கொண்டிருந்தனர். பெரும் பரப்பைக் குளிர் வித்து உயர்ந்திருந்த அதன் அடியில் ஒவ்வொரு பக்கத்துக்கும் இரண்டு பேராய் ஒரே சீரான வேகத்தில்அறுத்துக்கொண்டிருந்தனர்.இதனைப் பார்த்த கட்டையன் "இந்தக் காட்டின் மரம் ஒவ்வொன்றுக்குமான தாய் நிலாவில் இருக்கிறாள். இந்த மரங்கள் அவளின் பிள்ளைகள். இதைக் கொல்கிறவர்களை எல்லாம் அமாவாசை நாளில் நிலாவிலிருக்கும் பாம்பு வெறிகொண்டு விழுங்கிவிடுமென பாட்டா கூறியதை நினைத்தவன் "இந்தக் காட்டின் மரங்கள் ஒவ்வொன்றோடும் எத்தனையோ பளியர்களின் ஆன்மாவும் சேர்ந்தே தான் இருக்கிறது. தன் குழந்தையை பிரசவிக்கும் பளிச்சி அவளாகவேதான் பிரசவம் பார்த்துக்கொள்ள வேண்டும். தன் குழந்தையின் தொப்புள் கொடி அறுக்கிறவள் அந்தக் குழந்தையை முதலில் காட்டுவது இந்தக் காட்டிற்கு தான். பளியன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே காட்டின் வாச னைஅறிந்தவனென்பதால்குழந்தைதானிருக்கும் இடத்தை எளிதில் கண்டுகொள்ளும். அப்படி எத்தனையோ பேர் பார்த்து வளர்ந்து செத்துப் போன பின் அவர்களின் ஆன்மா எங்கும் போவதில்லை. பளிச்சி இந்தக் காட்டோடு என்றென்றைக்குமாக அவர்கள் இருக்கட்டு மென மரங்களில் வாழ அனுமதித்திருக்கிறாள். அந்த ஆத்மாக்களைத் தான் இவர்கள் வெட்டிக் கொண்டு இருக்கிறார்கள்" (லஷ்சுமி சரவணகுமார், கானகன், ப. 67) என்றும், பளியன்களின் ஆத்மா மட்டுமில்லை, அந்தக் காட்டிலிருக்கும் அத்தனை உயிர்களின் ஆத்மாக்களும் மரங்களில் தான் காலா காலத்திற்கும் சேமிக்கப்படுகின்றன. வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திலிருந்தும் வழியும் பளிச்சியின் குருதியையும், முலைப் பாலையும் வேதனையோடு பார்க்கும் பளியன், சமவெளி மக்களின் அத்துமீறலால் மரங்கள் வெட்டப்படுவதையும், இறந்ததற்கு பின்னால் மரங்களிலேயே தன் முன்னோர்களின் ஆன்மா வாழும் என்ற அவர்களின் நம்பிக்கை சிதைக்கப்படுவதையும் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

**விலங்குகள் வேட்டையாடப்படுதல்**

காட்டையே வாழிடமாக கொண்ட விலங்கு சுதந்திரமாகச் சுற்றித் திரியும். காட்டில் எல்லா வற்றுக்கும் இடமுண்டு என்பதுதான் அதன்

அடிப்படை விதி, ஆனால் அடிவாரத்திலிருந்து வந்த மனிதர்கள் எல்லோருடைய இடத்தையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ள நினைத்தனர். தாங்கள் வளைத்து போட்டிருக்கும் நிலத்தோடு சேர்த்து அதை மூடியிருக்கும் பரந்த ஆகாயத்திலும் பயிர் செய்யும் வெறியோடு இரவும் பகலுமாய் சுற்றித் திரிந்தனர். விலங்குகள் நடமாடும் இடமெங்கும் கஞ்சாத் தோட்டம் உருவாகத் தொடங்கின. கஞ்சாத் தோட்டம் அந்த மலையின் முக்கியத்து வத்தை முன்னைவிடவும் அதிகமாக்கியதில் பருத்திப் போடுக்கு மேல் புதிதாக இன்னொரு கஞ்சாத் தோட்டம் போட வேலையைத் துவங்கினார்கள். ஏற்கனவே குரங்காற்றையும் அதைச் சுற்றியிருந்த சின்ன சின்ன சுனைகளையும் தோட்டம் போட்டு ஆக்கிரமித்த நிலையில், தற்போது பருத்திப்போட்டில் சுனைகள் அதிகமென்பதால் கோடை காலத் தில் இடம்பெயரும் யானைகள் பெரும்பாலும் அந்தப் பகுதியில் தான் தஞ்சமடையும்.

கோடைக்காலத்தில் சுனையில் நீர் அருந்துவதற்காக வரும் யானைகள் தங்களின் வழக்கமான இடத்தில் தங்களுக்கு சம்பந்த மில்லாதவர்கள் இருப்பதைக் கண்டு குழம்பிப் போன யானைகள் முதலில் அச்சத்துடன் விலகி சென்றன. யானைகள் வருவது தெரிந்ததும் வானில் வெடிகளை எறிந்து அவற்றைத் துரத் தினாலும் கோடையின் தாக்கம் அதிகமாய் இருந்ததால் சுனைகளும் ஆறுகளும் வேகமாக வற்றிப் போனதாலும் வெறிகொண்ட யானைகள் அடுத்த முறை ரௌத்ரத்தோடு பருத்திப்போட்டுக்குள் இறங்கின. கோடையில் நீர் வற்றும்போது மிருகங்கள் இப்படி வெறிகொள்வது இயல்புதான். யானை நடமாடும் பகுதியையும், நீர் அருந்தவரும் சுனையையும் ஆக்கிரமித்து கஞ்சாத் தோட்டம் உருவாக்கியதில் ரௌத்ரம் கொண்ட யானைகள் வெறியோடு இறங்கி கஞ்சாத் தோட்டத்தை நாசம் செய்ததால் பேரிழப்பைச் சந்தித்த முதலாளிகள் தங்கப்பன், அன்சாரியின் உதவியுடன் அவற்றை வேட்டையாட முடிவு செய்தனர்.

வேட்டைக்கான எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு யானைகள் தாக்கப்பட்ட போது பளியனான வாசி தங்கப்பனிடமிருந்து இரண்டு யானைகளை காப்பாற்றி வேறு திசையில் ஓடவைத்தான். வாசியின் தந்தையான சடையன் "இந்த அகமலைக் காடு இருக்கும் காலம் வரையிலும் சடையனின் ஆன்மா இருக்கும் என்றும் இறந்தபின் தன்னுடலை பறவைகளுக்கு இல்லாமல் மிருகங்களே தின்ன வேண்டுமென விரும்பினான். பறவைகள் ஒரு வகையில் நாடோடிகள். அவற்றுக்கு நிரந்தரமான இடமில்லை. இந்தக் காட்டைச் சேராத ஒருவருக்கு தன்னுடலைத் தர அவனுக்கு விருப்பமில்லை" (லட்சுமி சரவணகுமார், கானகன், ப. 138) என்று கூறுவதிலிருந்து பளியனுக்கும், விலங்குகளுக்குமுள்ள பிணைப்பினை அறிந்து கொள்ள முடிகின்றது.

இதுமட்டுமல்லாது சமவெளியில் வாழும் மக்கள் பொழுது போக்கிற்காக விலங்குகளை வேட்டையாடுவதையும், அதற்கு தங்கப்பன் போன்ற கருமாண்டி உதவி செய்து காட்டில் வாழும் விலங்குகளான மான், கருமந்தி, காட்டுக் கோழி, காட்டுப்பன்றிகள், காட்டு மாடுகள் போன்ற விலங்குகளும் அவ்வப்போது வேட்டையாடப்படும் செய்தியையும் எழுத்தாளர் லசுமி சரவணகுமார் தனது நாவலில் பதிவு செய்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

இயற்கையின் கொடையாக விளங்கும் காடுகள் அழிக்கப்பட்டு சமவெளி மக்களின் வெறிச்செயலால் சூறையாடப்படுவதையும், காட்டின் உயிர் ஆதாரமாக விளங்கும் மரங்கள் வெட்டப்படுவதையும் காடுகளையே வாழிடமாகக் கொண்ட விலங்குகள் எந்த விதமான பாரபட்சமின்றி வேட்டையாடப்பட்டு அழிக்கப்படுவதையும், மரங்களில் தம் முன்னோர்களின் ஆன்மா தங்கும் என்ற பளியர் இன மக்களின் நம்பிக்கை சிதைக்கப்படுவதையும் கானகன் நாவலின் மூலம் எழுத்தாளர் லசுமி சரவணகுமார் எடுத்துக் கூறியுள்ளதை அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. *கானகன், 2019, லட்சுமி சரவணகுமார்,* Zero Degree Publication சென்னை. முதற்பதிப்பு
2. *சங்க இலக்கியம், 2006, ச.வே.சுப்பிரமணியன்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு
3. *திருக்குறள், 2014,* வ.உ.சிதம்பரம் தெளிவுரை, வ.உ.சி.நூலகம், சென்னை, முதற்பதிப்பு
4. *சங்க இலக்கியம் அகநானூறு, 2004,* கு.வெ.பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு
5. தொல்காப்பியம் தெளிவுரை, *2012,* புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு.
6. *சங்க இலக்கியம் கலித்தொகை, 2004,* கு.வெ.பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு
7. சிலப்பதிகாரச் சிந்தனைகள், *2009,* முனைவர் சு. பார்வதி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு.